சேந்தமங்கலம் குடிநீர் வழங்குத் திட்டம்.

*வினா எண் 269—திரு. வ. சின்னசாமி : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நாமக்கல் தாலுக்கா, சேந்தமங்கலம் பேரூராட்சிக்கு ரூ. 25 இலட்சம் செலவில் குழாய் மூலமாக கொல்லிமலை அடிவாரத்தில் இருந்து குடிநீர் கொண்டு வருவதற்கான திட்டம் இவ்வாண்டு எடுத்துக்கொள்ளப்பட உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : ஆம்.

குளிர் சாதன வசதியுள்ள விரைவுப் பேருந்துகள்.

*வினா எண். 270—திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நீண்டதூர விரைவுப் பேருந்துகளுக்கு குளிர் சாதன வசதி செய்து (Air-Conditioned Super Express) விடுவதற்கு அரசிடம் ஏதேனும் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் ; ஆம்.

திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன் : பேரவைத் தலைவர் அவர்களே, குளிர் சாதன வசதி பொறுத்தப்பட்ட நீண்டதூர விரைவுப் பேருந்துகள் தமிழ்நாட்டில் எத்தனை விடப்பட்டிருக்ருக்கின்றன? எத்தனை புதிய வழித்தடங்கலில் இத்தகைய பேருந்துகள் விடுவதற்கு அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை—திருவனந்தபுரம் வழித் தடத்தில் இரண்டு குளிர்சாதன வசதிகள் பொறுத்தப்பட்டுள்ள பேருந்துகள் விடப்பட்டிருக்கின்றன. சென்னை—திருச்சி. சென்னை—சேலம்,

1979 மார்ச் 7]

சென்னை—பங்களூர், சென்னை—பாண்டிச்சேரி, கோயம்புத்தூர் பங்களூர், மதுரை—பங்களூர் ஆகிய வழித் தடங்களில் குளிர் சாதன வசதிகள் பொறுத்தப்பட்ட 8 பேருந்துகள் விடுவதற்கான ஆய்வு நடத்தப்பட்டு வருகின்றது.

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவர் அவர்களே, துரிதப் பேருந்து வண்டிகளில் இத்தகைய குளிர்சாதன வசதிகள் பொறுத் தப்படுவதற்கு ஒரு வண்டிக்கு எவ்வளவு அதிகம் செலவாகிறது என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே, ஏறத்தாழ ஒன்றரை லட்சம் ரூபாய் ஒரு பேருந்துக்கு அதிகமாகும் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது.

[முற்பகல் 9-40]

திரு. சி. ராமநாதன் : சென்னையிலிருந்து திருச்சிக்கு செல் லும் விரைவு வண்டியை உளுந்தூர்பேட்டை—விருத்தாசலம் வழியாக விட அரசுக்கு உத்தேசம் உண்டா ? தற்போது அந்த வழியில் ஒரு வண்டி தவிர வேறு இல்லை. மேலும் வண்டிகள் விட அரசு ஆலோசனை செய்யுமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : வழித் தடத்தில் இயங்கி வருகிற வண்டிகளை மாற்றிவிடக்கூடிய எண்ணம் அர சுக்கு இல்லை. வேறு வண்டிகளை விட முடியுமா என்பதைப் பற்றி மற்றச் சூழ்நிலைகளை ஆய்ந்து முடிவு எடுக்கப்படும்.

திரு. கே. கந்தசாமி : பாராளுமன்ற உறுப்பினர்கள் எப்படி முதல் வகுப்பில் இலவசமாகப் பிரயாணம் செய்ய அனு மதிக்கப்பட்டிருக்கிறார்களோ அதுபோன்று பஸ்ஸிலே பிரயாணம் செய்வதற்கு நமக்கு பாஸ் கொடுத்திருக்கிறார்கள். அதிலே ஒரு டிஸ்கிரிமினேஷன் இருப்பதாகத் தெரிகிறது. குளிர் சாதனம் அமைக்கப்பட்டுள்ள பஸ்களில் பிரயாணம் செய்ய வேண்டுமென்றால் எக்ஸஸ் ரேட்டை நாங்கள் கட்டவேண்டு மென்று சொல்லுகிறார்கள்.

It appears to be not reasonable though not unreasonable.

ஆகவே, குளிர்சாதன வண்டிகளிலும் சட்டமன்ற உறுப்பினர்கள் இலவசமாகப் பயணம் செய்யலாம் என்ற உத்தரவு பிறப்பிக்கப் படுமா? ஜனதா கட்சித்தலைவர் ஜேம்ஸ் அவர்களும், பின் னால் அமர்ந்துள்ள பொதுவுடைமைக் கட்சி நண்பர்களும் எங்க

ளுடைய பெயர்கள் பேப்பரில் வந்துவிடும், நீங்கள் இதைப்பற்றி எங்கள் சார்பாகவும் கேளுங்கள் என்று சென்னார்கள். இதைப் பற்றி அரசு அருள்கூர்ந்து கவனிக்குமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு உறுபினர்கள் ரயிலில் கொடுக்கப்பட்டிருக்கிற சலுகைகளைக் கூட மாற்றியமைக்கும்படி கோரிக்கை விட்டிருக்கிறார்கள். அதோடு சேர்த்து இதுவும் பரிசீலிக்கப்படும். மாண்புமிகு உறுப்பினர் ஜேம்ஸ் அவர்கள் இதைப் பற்றிக் கூறினார்கள் என்று மாண்புமிகு கந்தசாமி அவர்கள் கூறினார்கள். மாண்புமிகு திரு. ஜேம்ஸ் அவர்கள் மத்திய அரசிடம் கூறி மாநில அரசுக்கு அதிக நிதி வாங்கித்தர முயற்சி செய்தால் இதுபோன்ற வசதிகளை அதிகமாக்க வாய்ப்பாக இருக்கும்.

திரு. ஜே. ஜேம்ஸ் : சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு 150 கோடி ரூபாயை அதிகமாக மாநில அரசுக்கு மத்திய அரசு வழங்கியிருக்கிறது. அதை மனதில் கொண்டு மாண்புமிகு அங்கத்தினர்கள் விடுக்கின்ற கோரிக்கைகளைக் கவனிப்பது நல்லது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. துரை கோவிந்தராசன் : குளிர்சாதனம் பொருத்தப்பட்ட பேருந்துகள் சேலம் போன்ற எட்டு பகுதிகளுச்கு விடப்பட இருப்பதாகத் தெரிவித்தார்கள். அதிலே தஞ்சை சேர்த்துக் கொள்ளப்படுமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தற்போது எடுக்கப்பட்டிருக்கிற ஆய்வில் தஞ்சை இடம் பெறவில்லை. மீண்டும் அதுபற்றிப் பரிசீலிக்கப்படும்.

திரு. மு. அம்பிகாபதி : தஞ்சை என்றால் நஞ்சையும் புஞ்சையும் கொஞ்சி விளையாடும் தஞ்சை. அது நிராகரிக்கப்பட்டிருப்பது சரியல்ல. அவசர நேரங்களில் அந்தக் குளிர் சாதன வண்டிகளில் ஏற வேண்டுமென்றால் ஏற்றமாட்டேன் என்கிறார்கள். ஆகவே, துரிதமாகப் பரிசீலித்து குளிர் சாதன வண்டியை தஞ்சை வழியாக தூத்துக்குடி வரை செல்ல அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தஞ்சை நிராகரிக்கப்பட்டதாகச் சொல்லவில்லை. அடுத்த ஆய்வில் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்று கூறினேன். மாண்புமிகு உறுப்பினர்கள் ஆலோசனை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.